www.tamilarangam.net

# தமிழீழப் போராட்டத்தில் பின்னடைவு ஏன்? சிந்திப்போம்! செயலாற்றுவோம்!!

இனிய தமிழ் மக்களே!

கடந்த சில வாரங்களாக எம் எல்லோர் மனங்களையும் ஒரு தாங்கொணாத் துயரம் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றது. எது நடக்கக் கூடாது என நாம் அங்கலாய்த்துக்கொண்டிருந்தோமோ அது நடந்துவிட்டது. ஆயிரக்கணக்கான மக்களினதும் போராளிகளினதும் தியாகங்களால், குறிப்பாக உயிர்தியாகங்களால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட வட தமிழீழ மண்ணில் மீண்டும் ஆக்கிரமிப்பாளர்களின் கால்கள் பதிந்து விட்டன. கசப்பான செய்திதான். விரும்பியோ விரும்பாமலோ இதை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். மீண்டும் எமது போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றுதான் ஆகவேண்டும்.

வீரமரணமடைந்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்துவோம்!
போராட்ட பின்னடைவிற்கான காரணிகளை ஆராய்வோம்!!

கடந்த முப்பது வருடங்களாக சரி பிழைகளுக்கப்பால் பாராளுமன்ற தலைமைகளாலும் ஆயுதப்போராட்ட விடுதலை இயக்கங்களாலும் முன்னோக்கிச் சென்றுகொண்டிருந்த விடுதலைப் போராட்டம் இன்று பின்னடைந்திருப்பதற்கான காரணங்கள் என்ன? காரணங்கள் மருந்து போல் கசக்கலாம், ஆனால் ஆரோக்கியமான போராட்டத்திற்கு இது அவசியமானது.
மக்களுக்காக மரணித்த மாவீரர்களே! உங்கள் இழப்புக்கள் விலைமதிக்க முடியாதவை. உங்கள் தியாகங்களுக்கு தலைவணங்கி அஞ்சலி செலுத்துகின்றோம். மாவீரர் சமாதியை மாபாதக இராணுவம் கைப்பற்றியிருக்கலாம். ஆனால் மக்கள் மனங்களில் இருந்து உங்கள் நினைவுகளை ஒருபோதும் அழிக்க முடியாது. போராட்ட பின்னடைவுக்கான காரணங்களை ஆய்வு செய்யும் நாம் புலித்தலைமையின் தவறான போக்கை விமர்சித்து மாற்றத்தை ஏற்படுத்த விரும்புகின்றோமேயல்லாமல், உங்கள் தியாகங்களை குறைத்து மதிப்பிடும் குதர்க்கவாதிகளோ, குழப்பவாதிகளோ அல்ல என்பதை இந்த ஆய்வை தொடர முன் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

கை குலுக்கலும், கழுத்தறுப்பும்!

தலைமறைவு வாழ்க்கை, சிறைவாசம், சித்திரவதைகள், சிறைப்படுகொலைகள், இத்தனை கடினங்களுக்கு மத்தியிலும் அனைத்து இயக்கப் போராளிகளும் விடுதலை உணர்வுடன் ஒன்றுபட்டு போராடியதால்தான் 1985ம் ஆண்டில் யாழ் குடாநாட்டை இராணுவத்தின் பிடியிலிருந்து மீட்கமுடிந்தது. மீட்ட யாழ்ப்பாணத்தை மீண்டும் இராணுவத்தின் காலடி பட விடாமல் அனைத்து இயக்கங்களும் ஒன்றுபட்டு, அனைத்து இராணுவ முகாம் களையும் சுற்றிக்காவல் புரிந்தார்கள். இராணுவம் வெளியேற முற்பட்ட வேளையில் எதிர்த்துத்தாக்கி இராணுவத்தை கோட்டைக்குள்ளேயே முடங்கச் செய்தார்கள். TELO, LTTE, EPRLF, EROS இயக்கங்கள் ஐக்கியப்பட்டு ENLFஐ அமைத்திருந்த காலம். தலைமைமட்டத்தில் PLOTE இந்த ENLFஐக்கிய முன்னணிக்குள் இணையவில்லையாயினும் களத்தில் ஐக்கியப்பட்டு போராடியகாலம். இந்த ஐக்கியத்தை குலைத்தது யார்? கைகுலுக்கிவிட்டு கழுத்தறுப்புச் செய்தது யார்?

எதிரிகளின் முகாம்களுக்குள் உளவுப்படையை அனுப்பவேண்டிய புலிகள், சகபோராட்ட இயக்கங்களின் முகாம் களுக்குள் உளவுப்பிரிவை அனுப்பி அவர்களை கோஷ்டியாக மோதவைத்தனர். சிறிசபாரத்தினத்துடன் முரண் பட்டிருந்த ரமேஷ், சுதன் குழுவினர்க்கு ஆயுதம் கொடுத்து சிறிசபாரத்தினத்தை கொல்ல சதிமுயற்சி செய்தனர். பின்பு சிறிசபாரத்தினம், தாஸ் முரண்பாட்டில் எண்ணை ஊற்றி மோதலை வளர்த்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு குழிபறித்தனர் புலிகள். சாவகச்சேரி பொலிஸ்நிலையத்தையும், இராணுவம் சென்ற புகையிரதத்தையும் தாக்கி அழித்து, சாதனை செய்த போது ஆர்ப்பாரித்த நீங்கள் TELO இயக்கம், புலிகளின் அராஜகத்தால் அழிக்கப்பட்டபோது, தமிழ் இளைஞர்கள் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சகதமிழ் இளைஞர் களால் அழிக்கப்பட்டபோது, உயிருடன் ரயர் போட்டுக் கொழுத்தப்பட்ட போது, தமிழீழ மக்களே! நீங்கள் தட்டிக்கேட்டீர்களா? இது எமது போராட்டத்திற்கு ஊறுவிளைவிக்கும் என்று எடுத்துச் சொன்னீர்களா? மாறாக அதிகாரத்திற்கும், பலத்திற்கும் பந்தம் பிடிக்கும் சிலர் ரயர் போட்டு கொழுத்திய வீரவேங்கைகளுக்கு கொக்கோ கோலா உடைத்துக்கொடுத்து அகமகிழ்ந்தார்கள். மிருகங்களை வெட்டும்போது கூட மனிதாபிமானம் பார்க்கப்படுகிறது. மனிதனை, சகதமிழனை கொன்ற போது புலிகளுக்கு மனிதாபிமானம் இருக்கவில்லை. சாவகச்சேரி பொலிஸ்நிலையத்தையும், புகையிரதத்தில் சென்ற இராணுவத்தினர் மீதான தாக்குதலையும் வீடியோ படம் பிடித்து வெளிநாடுகளெல்லாம் TELO வினர் அனுப்பிவைத்தனர். தாக்குதலைப் பார்த்து தட்டிக் கொடுத்து நிதி குவித்தவர்கள் கூட TELO வை அழித்தபோது நீதி கேட்கவில்லை. களத்தில் மக்களோடு மக்களாகப் போரட வந்த சிறிசபாரத்தினத்தை சன்னமாரி பொழிந்து உடல் சல்லடை ஆகும்வரை சுட்டுக்கொன்றார்கள். பேசுவோம், பேசுவோம் என்று சபாரத்தினம் இரந்து கேட்டபோதும் ஈவிரக்கமின்றி சன்னமாரி பொழிந்தவர் தளபதி கிட்டு.

இந்த அரக்கத்தனத்தை எவ்வாறு உங்களை ஆமோதிக்கவைத்தனர். உள்ளூரிலும் வெளியூரிலும் TELO விற்கு ஏற்பட்ட ஆதரவை பொறுக்கமுடியாத புலிகள் TELO விற்கு அவப்பெயரை ஏற்படுத்தும்முகமாக TELO வினர் போல் வேஷமிட்டு தனிப்பட்ட வீடுகளில் கொள்ளைகளை திட்டமிட்டு நடத்தினார்கள். மறுநாள் தமது எடுபிடிகளை கொள்ளை நடந்த இடங்களுக்குச் சென்று கதைகளைக் கட்டுமாறு அனுப்பினார்கள். 1983ம் ஆண்டில் ஏற்பட்ட போராட்டத்தின் திடீர் வளர்ச்சியால் இயக்கப்போராளிகளை கட்டுப்பாடாகவும், ஒழுக்கமான வர்களாகவும் வைத்திருக்கமுடியாமல் TELO தலைமை திண்டாடியது உண்மைதான். அதைப் புலிகள் தமக்குச் சாதகமாக்கி TELO வை அழித்து, தமது தனித்தலைமை அதிகாரவெறியைத் தீர்த்தனர். நெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவிலில் கொள்ளையடித்தவர்கள் கிட்டு தலைமையில் சென்ற கோஷ்டியினர் தான். அதையும் TELO செய்ததாக பிரச்சாரப்படுத்தி, உங்களை ஏமாற்றி TELO அழிப்பை நியாயப்படுத்தினர். திடீரென கொள்ளை அடிக்கப்பட்ட நகைகள் துர்க்கையம்மனின் திருப்பாதவடிக்கு திரும்பிவந்தது. உண்மையில் நடந்தது என்ன? கிட்டு தலைமையிலான துர்க்கையம்மன் கோவில் கொள்ளையின் பின் புலிகளுக்கு பாரிய இழப்புகள் ஏற்பட்டன. கடல்பிராந்தியத்தில் ஆயுதங்களுடன் வந்த புலிகளின் கப்பல் கடற்படையால்

www.tamilarangam.net

தாக்கியழிக்கப்பட்டது. "தெய்வப்பழி" எனப் பயந்த கிட்டு மீண்டும் கோவிலில் நகைகளைப் போட்டுவிட்டார். நகை அடைவு பிடிக்கும் குரும்பசிட்டி வன்னியசிங்கத்தின் வீட்டில் முன்னின்று கொள்ளை நடாத்திய தேசியத்தலைவர் பிரபாகரன், கல்லெறிந்த மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து இரு தமிழர்களை சுட்டுக்கொன்றார். TELO இயக்க அழிப்பை நியாயம் என ஆமோதித்த நீங்கள் தேசியத்தலைவர் பிரபாகரனுக்கும்,கோவில் கொள்ளைத் தளபதி கிட்டுவுக்கும் தண்டனை கொடுக்கவில்லை. தமிழ் மக்களின் அமோக ஆதரவை TELOவினர் பெற்றிருந்த நேரத்தில் சிறிசபாரத்தினத்தைக் கொல்ல ஆள் அனுப்பினர் புலிகள். 1986ல் தனிப்பட்ட கொள்ளைக்காரர்கள் என தலைவர் சிறிசபாரத்தினத்தையும் ஏனைய பல TELO இயக்கத்தினரையும் சுட்டுக் கொன்ற நீங்கள் அதற்கு முன் தனித்துவத் தலைமை வெறியினாலா சிறிசபாரத்தினத்தை கொல்ல ஆள் அனுப்பினீர்கள்? என நீங்கள் கேட்டிருக்க வேண்டும். நீங்கள் கேட்கவில்லை.

தமிழீழச் சிறைப்படுகொலை!

"பெடியள் செய்வார்கள" என்று சொன்ன நீங்கள் பின்பு "புலிகள் செய்வார்கள" என்று மாறி, அனைத்திற்கும் ஆமா போட்டீர்கள். அந்த உத்வேகத்தில் அவர்கள் EPRLF வினரை அழிக்கத் திட்டமிட்டார்கள். அழித்தார்கள். காரணம் என்ன என்று நீங்கள் கேட்கவில்லை, அவர்கள் சொன்னார்கள் "புலிகளை தாக்கும் EPRLF வினர் திட்டம் அம்பலம் அதனால் முந்தினோம" என்றார்கள். தாக்குதல் நடத்த EPRLF தயாராகுகின்றார்கள் என்று உளவறிந்தால் நீங்கள் எதிர்தாக்குதலுக்கு தயார் நிலையில், புலிகளை உசார் நிலையில் அல்லவா வைத்திருக்கவேண்டும், ஏன் தாக்குதலை ஆரம்பித்தீர்கள்? என நீங்கள் கேட்டிருக்கவேண்டும், கேட்கவில்லை. EPRLF ற்குள் உள்இயக்க முரண்பாடுகள் தோன்றி பத்மநாபாவினதும், டக்ளஸ் தேவானந்தாவினதும் உறவில் விரிசல் ஏற்பட்டு EPRLF பலவீனமடைந்திருந்த நேரத்தில் அவர்கள் உங்களை தாக்க முட்டாள்தனமாக முடிவெடுத்திருப்பார்களா? என நீங்கள் கேட்டிருக்கவேண்டும். நீங்கள் கேட்கவில்லை. புலிகளின் இந்த அராஜக நடவடிக்கைகளின் பின் ஆயிரக்கணக்கான போராளிகள் போராட்டதில் வெறுப்படைந்து ஒதுங்கினார்கள். வெளிநாடுகளுக்குச் சென்றார்கள். புலிகளின் அராஜகத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து, புலிகள் இயக்கத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்த பல இளைஞர்கள் ஒதுங்கி வெளிநாடுகளுக்குச் சென்றார்கள். தமிழீழ மண்ணை நேசித்து உயிர்த்தியாகம் செய்யவும் தயாராக இருந்த நூற்றுக்கணக்கான போராளிகள் புலிகளின் மனிதவதை முகாம்களுக்குள் சித்திரவதை செய்யப்பட்டனர். அந்தக் காலகட்டத்தில் கிட்டுவின் பெயர் ஓங்கியிருந்த காலம். பத்திரிகை நிருபர்கள் தேசியத்தலைவரை விட தளபதியை சந்திக்க விரும்பிய காலம். இந்தியாவில் இருந்த தலைவர் தன் தலைமைக்கு ஆபத்து வந்துவிடுமோ என அஞ்சினார். தமிழீழம் வந்தார். கிட்டுவின் போட்டிக் கோஷ்டியான மாத்தையாவை வைத்து கிட்டுவை ஒழித்து, தமிழீழப் போராட்டத்திற்கு உரமூட்ட எண்ணினார். கிட்டு கால் இழந்தார். EPRLF மீது பழி போடப்பட்டது. ஆத்திரமடைந்த, கிட்டுவின் விசுவாசிகளைத் தூண்டி புலிகளின் கந்தன் கருணை சிறையில் இருந்த 65 போராளிகளை அருணா தலைமையில் படுகொலை செய்தனர். ஒரே கல்லில் இரு மாங்காய்கள் என தலைவர் புழங்காகிதமடைந்தார். பின்பு மாத்தையாவை ஒழிக்க முற்பட்டவேளையில் கிட்டுவை சுட உத்தரவிட்டது மாத்தையா கோஷ்டியென் மாத்தையா ஒழிப்பிற்கும் நியாயம் கற்பித்தார்கள். எது உண்மை? அன்று சொன்னதா? இன்று சொல்வதா? என் நீங்கள் கேட்டிருக்க வேண்டும் நீங்கள் கேட்க்வில்லை. இன்று மாத்தையாவும் மண்டையில் போடப்பட்டு விட்டதாக ஒரு செய்தி

புலிகள் இயக்கத்தில் உள்ளவர்கள் காதலிக்கக்கூடாது என தடைவிதிக்கப்பட்ட காலத்தில் உமாமகேஸ்வரன் காதலித்துவிட்டார் என்பதைக் காரணம் காட்டி இயக்கத்தில் இருந்து பிரிந்து இயக்கமோதல்களுக்கு வித்திட்டவர் எமது தேசியதலைவர். அதன் ஆரம்பக்கட்டமாக இராணுவரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் மக்களை வழிநடத்தக் கூடிய திறமைவாய்ந்த "புதிய பாதை" சுந்தரத்தை சுட்டுக்கொன்றார் எமது தேசியதலைவர். அக்காலகட்டத்தில் நீர்வேலி வங்கிக் கொள்ளையை TELO இயக்கத்துடன் நடாத்திய பிரபாகரனை பொலிஸ் குறி வைத்துச்சுட்டது. ஒரு நொடி தாமதமாகியிருந்தால் பிணமாகியிருப்பார் பிரபாகரன். பாய்ந்து தடுத்தான் வீரன் சிறிசபாரத்தினம். அந்த நன்றி கூட இல்லாமல் சபாரத்தினத்தை சுட்டுக்கொன்றது சரியா என நீங்கள் கேட்டிருக்கவேண்டும். ஆனால் நீங்கள் கேட்கவில்லை. அதே பிரபாகரன் 1985ல் கடத்திச் செல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவிகளில் ஒருவரான உண்ணாவிரதப் போராளி, புங்குடுதீவைச் சேர்ந்த சர்வோதயத் தலைவரின் மகள் மதிவதனி மேல் காதல்வசப்பட்டார். "சர்வோதயம் பற்றிப்பேசவென சாட்டுப்போக்குச் சொல்லி சர்வ உதயமும் பெறுகின்றார் தலைவர்." இது இயக்கவிதிகளுக்கு முரணானது எனச் சுட்டிக்காட்டினார் தலைவரின் வலதுகரம் ராகவன். ரவைகள் ராகவனை பதம்பார்க்க ஆயத்தமாகின. தப்பித்துக் கொண்டு வெளிநாடு சென்றுவிட்டார். இயக்கவிதிகளை மீறிய உமாமகேஸ்வரனுக்கு மரணதண்டனை தேசியத் தலைவருக்கு இல்லையா என நீங்கள் கேட்டிருக்க வேண்டும். நீங்கள் கேட்கவில்லை.

அரைமாவீரர், அரைத்துரோகித் தாய்க்குலம்.

மட்டக்களப்பில்1987ல் இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டு யுத்தநிறுத்தம் ஏற்பட்டிருந்த காலத்தில் மட்டக்களப்பில் மோட்டார்வாகனம் ஒன்றில் சென்றுகொண்டிருந்த PLOTE இயக்க போராளிகள் மீது கண்ணிவெடித்தாக்குதல் நடாத்தினார்கள் புலிகள். வாசுதேவா, கண்ணன், போன்ற ஆளுமை மிக்க தலைவர்கள் கொல்லப்பட்டனர். சிறைமீண்டு, மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டு வீரமரணமடைந்த மாவீரன் பரமதேவா புலிகளின் முன்னணி உறுப்பினர். அவரின் சகோதரன் தான, வாசுதேவன் அவன் போராடியதும் தமிழீழ மண்ணின் விடிவிற்காகத்தான். PLOTE இயக்கத்தில் இணைந்ததற்காக அவன் துரோகியா? பரமதேவா, வாசுதேவாவின் தாயார் அரைமாவீரர், அரைத்துரோகித் தாயா? என நீங்கள் கேட்டிருக்கவேண்டும். ஆனால் நீங்கள் கேட்கவில்லை. இது பெயர் தெரிந்த இருவரின் உதாரணம் தான். இது போல் எத்தனை நூற்றுக்கணக்கான தாய்மார்கள் இருக்கின்றார்கள் என உங்களுக்கு தெரியுமா?

1989ல் சிங்கள இனவாத அரசின் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் கைகுலுக்கினார் தேசியதலைவர். பொதுஎதிரி இந்திய இராணுவத்தை வெளியேற்று எனச் சொன்னார்கள். ஆனால் ஆக்கிரமிப்பாளர்களின் ஆயுதத்தையும் பணத்தையும் வாங்கி ஸ்ரீலங்கா வான்படையின் உதவியுடன் செட்டிகுளத்தில் அமைந்திருந்த PLOTE இயக்கத்தின் பலமிக்க முகாமை தாக்கி பல ஆளுமை மிக்க போராளிகளை கோழைத்தனமாக கொன்று குவித்தார்கள். ஸ்ரீலங்கா அரசுடன் சேர்ந்து இந்திய இராணுவத்திற்கு எதிராகத்தானே போராட்டம். PLOTE இயக்கத்தினரும் இந்திய இராணுவம் தமிழீழத்தை விட்டு வெளியேற வேண்டும் என்ற கொள்கையுடன் தானே செயற்பட்டார்கள், ஏன் எமது நட்புசக்திகளையும் கோழைத்தனமாக அழித்தீர்கள? என்று நீங்கள் கேட்டிருக்க வேண்டும்.நீங்கள் கேட்கவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாக்கியழிக்கப்பட்டது. "தெய்வப்பழி" எனப் பயந்த கிட்டு மீண்டும் கோவிலில் நகைகளைப் போட்டுவிட்டார். நகை அடைவு பிடிக்கும் குரும்பசிட்டி வன்னியசிங்கத்தின் வீட்டில் முன்னின்று கொள்ளை நடாத்திய தேசியத்தலைவர் பிரபாகரன், கல்லெறிந்த மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து இரு தமிழர்களை சுட்டுக்கொன்றார். TELO இயக்க அழிப்பை நியாயம் என ஆமோதித்த நீங்கள் தேசியத்தலைவர் பிரபாகரனுக்கும்,கோவில் கொள்ளைத் தளபதி கிட்டுவுக்கும் தண்டனை கொடுக்கவில்லை. தமிழ் மக்களின் அமோக ஆதரவை TELOவினர் பெற்றிருந்த நேரத்தில் சிறிசபாரத்தினத்தைக் கொல்ல ஆள் அனுப்பினர் புலிகள். 1986ல் தனிப்பட்ட கொள்ளைக்காரர்கள் என தலைவர் சிறிசபாரத்தினத்தையும் ஏனைய பல TELO இயக்கத்தினரையும் சுட்டுக் கொன்ற நீங்கள் அதற்கு முன் தனித்துவத் தலைமை வெறியினாலா சிறிசபாரத்தினத்தை கொல்ல ஆள் அனுப்பினீர்கள்? என நீங்கள் கேட்டிருக்க வேண்டும். நீங்கள் கேட்கவில்லை.

தமிழீழச் சிறைப்படுகொலை!

"பெடியள் செய்வார்கள" என்று சொன்ன நீங்கள் பின்பு "புலிகள் செய்வார்கள" என்று மாறி, அனைத்திற்கும் ஆமா போட்டீர்கள். அந்த உத்வேகத்தில் அவர்கள் EPRLF வினரை அழிக்கத் திட்டமிட்டார்கள். அழித்தார்கள். காரணம் என்ன என்று நீங்கள் கேட்கவில்லை, அவர்கள் சொன்னார்கள் "புலிகளை தாக்கும் EPRLF வினர் திட்டம் அம்பலம் அதனால் முந்தினோம" என்றார்கள். தாக்குதல் நடத்த EPRLF தயாராகுகின்றார்கள் என்று உளவறிந்தால் நீங்கள் எதிர்தாக்குதலுக்கு தயார் நிலையில், புலிகளை உசார் நிலையில் அல்லவா வைத்திருக்கவேண்டும், ஏன் தாக்குதலை ஆரம்பித்தீர்கள்? என நீங்கள் கேட்டிருக்கவேண்டும், கேட்கவில்லை. EPRLF ற்குள் உள்இயக்க முரண்பாடுகள் தோன்றி பத்மநாபாவினதும், டக்ளஸ் தேவானந்தாவினதும் உறவில் விரிசல் ஏற்பட்டு EPRLF பலவீனமடைந்திருந்த நேரத்தில் அவர்கள் உங்களை தாக்க முட்டாள்தனமாக முடிவெடுத்திருப்பார்களா? என நீங்கள் கேட்டிருக்கவேண்டும். நீங்கள் கேட்கவில்லை. புலிகளின் இந்த அராஜக நடவடிக்கைகளின் பின் ஆயிரக்கணக்கான போராளிகள் போராட்டதில் வெறுப்படைந்து ஒதுங்கினார்கள். வெளிநாடுகளுக்குச் சென்றார்கள். புலிகளின் அராஜகத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து, புலிகள் இயக்கத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்த பல இளைஞர்கள் ஒதுங்கி வெளிநாடுகளுக்குச் சென்றார்கள். தமிழீழ மண்ணை நேசித்து உயிர்த்தியாகம் செய்யவும் தயாராக இருந்த நூற்றுக்கணக்கான போராளிகள் புலிகளின் மனிதவதை முகாம்களுக்குள் சித்திரவதை செய்யப்பட்டனர். அந்தக் காலகட்டத்தில் கிட்டுவின் பெயர் ஓங்கியிருந்த காலம். பத்திரிகை நிருபர்கள் தேசியத்தலைவரை விட தளபதியை சந்திக்க விரும்பிய காலம். இந்தியாவில் இருந்த தலைவர் தன் தலைமைக்கு ஆபத்து வந்துவிடுமோ என அஞ்சினார். தமிழீழம் வந்தார். கிட்டுவின் போட்டிக் கோஷ்டியான மாத்தையாவை வைத்து கிட்டுவை ஒழித்து, தமிழீழப் போராட்டத்திற்கு உரமூட்ட எண்ணினார். கிட்டு கால் இழந்தார். EPRLF மீது பழி போடப்பட்டது. ஆத்திரமடைந்த, கிட்டுவின் விசுவாசிகளைத் தூண்டி புலிகளின் கந்தன் கருணை சிறையில் இருந்த 65 போராளிகளை அருணா தலைமையில் படுகொலை செய்தனர். ஒரே கல்லில் இரு மாங்காய்கள் என தலைவர் புளுங்காகிதமடைந்தார். பின்பு மாத்தையாவை ஒழிக்க முற்பட்டவேளையில் கிட்டுவை சுட உத்தரவிட்டது மாத்தையா கோஷ்டியென் மாத்தையா ஒழிப்பிற்கும் நியாயம் கற்பித்தார்கள். எது உண்மை? அன்று சொன்னதா? இன்று சொல்வதா? என் நீங்கள் கேட்டிருக்க வேண்டும் நீங்கள்! கேட்க்வில்லை. இன்று மாத்தையாவும் மண்டையில் போடப்பட்டு விட்டதாக ஒரு செய்தி

புலிகள் இயக்கத்தில் உள்ளவர்கள் காதலிக்கக்கூடாது என தடைவிதிக்கப்பட்ட காலத்தில் உமாமகேஸ்வரன் காதலித்துவிட்டார் என்பதைக் காரணம் காட்டி இயக்கத்தில் இருந்து பிரிந்து இயக்கமோதல்களுக்கு வித்திட்டவர் எமது தேசியதலைவர். அதன் ஆரம்பக்கட்டமாக இராணுவரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் மக்களை வழிநடத்தக் கூடிய திறமைவாய்ந்த "புதிய பாதை" சுந்தரத்தை சுட்டுக்கொன்றார் எமது தேசியதலைவர். அக்காலகட்டத்தில் நீர்வேலி வங்கிக் கொள்ளையை TELO இயக்கத்துடன் நடாத்திய பிரபாகரனை பொலிஸ் குறி வைத்துச்சுட்டது. ஒரு நொடி தாமதமாகியிருந்தால் பிணமாகியிருப்பார் பிரபாகரன். பாய்ந்து தடுத்தான் வீரன் சிறிசபாரத்தினம். அந்த நன்றி கூட இல்லாமல் சபாரத்தினத்தை சுட்டுக்கொன்றது சரியா என நீங்கள் கேட்டிருக்கவேண்டும். ஆனால் நீங்கள் கேட்கவில்லை. அதே பிரபாகரன் 1985ல் கடத்திச் செல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவிகளில் ஒருவரான உண்ணாவிரதப் போராளி, புங்குடுதீவைச் சேர்ந்த சர்வோதயத் தலைவரின் மகள் மதிவதனி மேல் காதல்வசப்பட்டார். "சர்வோதயம் பற்றிப்பேசவென சாட்டுப்போக்குச் சொல்லி சர்வ உதயமும் பெறுகின்றார் தலைவர்." இது இயக்கவிதிகளுக்கு முரணானது எனச் சுட்டிக்காட்டினார் தலைவரின் வலதுகரம் ராகவன். ரவைகள் ராகவனை பதம்பார்க்க ஆயத்தமாகின. தப்பித்துக் கொண்டு வெளிநாடு சென்றுவிட்டார். இயக்கவிதிகளை மீறிய உமாமகேஸ்வரனுக்கு மரணதண்டனை தேசியத் தலைவருக்கு இல்லையா என நீங்கள் கேட்டிருக்க வேண்டும். நீங்கள் கேட்கவில்லை.

அரைமாவீரர், அரைத்துரோகித் தாய்க்குலம்.

மட்டக்களப்பில்1987ல் இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டு யுத்தநிறுத்தம் ஏற்பட்டிருந்த காலத்தில் மட்டக்களப்பில் மோட்டார்வாகனம் ஒன்றில் சென்றுகொண்டிருந்த PLOTE இயக்க போராளிகள் மீது கண்ணிவெடித்தாக்குதல் நடாத்தினார்கள் புலிகள். வாசுதேவா, கண்ணன், போன்ற ஆளுமை மிக்க தலைவர்கள் கொல்லப்பட்டனர். சிறைமீண்டு, மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டு வீரமரணமடைந்த மாவீரன் பரமதேவா புலிகளின் முன்னணி உறுப்பினர். அவரின் சகோதரன் தான, வாசுதேவன் அவன் போராடியதும் தமிழீழ மண்ணின் விடிவிற்காகத்தான். PLOTE இயக்கத்தில் இணைந்ததற்காக அவன் துரோகியா? பரமதேவா, வாசுதேவாவின் தாயார் அரைமாவீரர், அரைத்துரோகித் தாயா? என நீங்கள் கேட்டிருக்கவேண்டும். ஆனால் நீங்கள் கேட்கவில்லை. இது பெயர் தெரிந்த இருவரின் உதாரணம் தான். இது போல் எத்தனை நூற்றுக்கணக்கான தாய்மார்கள் இருக்கின்றார்கள் என உங்களுக்கு தெரியுமா?

1989ல் சிங்கள இனவாத அரசின் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் கைகுலுக்கினார் தேசியதலைவர். பொதுஎதிரி இந்திய இராணுவத்தை வெளியேற்ற எனச் சொன்னார்கள். ஆனால் ஆக்கிரமிப்பாளர்களின் ஆயுதத்தையும் பணத்தையும் வாங்கி ஸ்ரீலங்கா வான்படையின் உதவியுடன் செட்டிகுளத்தில் அமைந்திருந்த PLOTE இயக்கத்தின் பலமிக்க முகாமை தாக்கி பல ஆளுமை மிக்க போராளிகளை கோழைத்தனமாக கொன்று குவித்தார்கள். ஸ்ரீலங்கா அரசுடன் சேர்ந்து இந்திய இராணுவத்திற்கு எதிராகத்தானே போராட்டம். PLOTE இயக்கத்தினரும் இந்திய இராணுவம் தமிழீழத்தை விட்டு வெளியேற வேண்டும் என்ற கொள்கையுடன் தானே செயற்பட்டார்கள், ஏன் எமது நட்புசக்திகளையும் கோழைத்தனமாக அழித்தீர்கள? என்று நீங்கள் கேட்டிருக்க வேண்டும்.நீங்கள் கேட்கவில்லை.

www.tamilarangam.net

தளபதியை சுட்ட நம்பிக்கைத் துரோகிகள்.

1989ல் அமிர்தலிங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று கேட்டு ஏற்பாடு செய்தார்கள். அவர்களும் புலிகளை நம்பி சோதனை செய்யாமல் உள்ளே பேச அழைத்தார்கள். வாயாலும் கருத்தாலும் பேசத்தெரியாத புலிகள் துப்பாக்கியால் பேசினார்கள். துப்பாக்கியே கையில் எடுக்காத, அதிலும் 25 வருடமாக தளபதி என நீங்கள் பாராட்டிய ஒரு தலைவரை. விருந்தாளிகளாகச் சென்று கொன்றது கோழைத்தனமல்லவா என நீங்கள் கேட்டிருக்கவேண்டும். நீங்கள் கேட்கவில்லை. உலகில் எந்த ஒரு நாட்டிலாவது இப்படியொரு பயங்கரவாதம் நடந்திருக்கிறதா? எந்தவொரு பயங்கரவாத அமைப்பாவது இப்படி ஒரு அநாகரிகசெயலை செய்திருக்கின்றதா? புராதன காலங்களில் கூட தூது அனுப்பப்படுபவர்கள் தமது இருப்பிடங்களுக்குச் சென்ற பின்பு தான் போரை ஆரம்பிப்பார்கள். நாகரிக காலத்தில் விருந்தாளியாக சென்று நம்பிக்கைத் துரோகமாக ஒரு அரசியல் தலைவரைக் கொன்றால் உலகநாடுகள் எமது இனத்தைப்பற்றி என்ன கருதுவார்கள். அமிர்தலிங்கம் இருக்கும் வரை உலகநாடுகளும் தமிழ் மக்களும் பிரபாகரனை தேசியத் தலைவராக ஏற்றுக்கொள்ளாது, என்ற ஒரே நோக்கத்திற்காக செய்யப்பட்ட அரசியல் படுகொலை தான் அமிர், யோகேஸ் கொலைகள் என்று இப்போதாவது உங்களுக்கு விளங்குகிறதா?

சர்வதேச பெண்கள் அமைப்பின் கௌரவ விருது பெற்ற யாழ் பல்கலைக்கழக மாணவி செல்வி இனவெறி அரசிற்கு எதிராக குரல் கொடுத்தவர். எதிரிக்கு தகவல் சொன்ன துரோகியுமல்ல. தமிழீழ போராட்டத்தில் உள்ள தவறுகளை சுட்டிக்காட்டி திருந்தும்படி கோரியவர். அரசியல் தெளிவு இருக்கின்றது என்ற ஒரே காரணத்திற்காக புலிகளால் கடத்தி, சிறைவைக்கப்பட்டு கொல்லப்பட்டாள். பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள். தேசியத்தலைவரிடம் இதை எதிர்பார்க்கலாமா?

ஒன்றாக படுத்திருந்த மூத்த உறுப்பினர் மைக்கல் நித்திரைப்பாயிலேயே பிரபாகரனால் பிணமாக்கப்பட்டார். பிரபாகரனின் தலைமறைவு வாழ்க்கையில் கை கொடுத்து உதவிய பாரிஸ் சபாலிங்கம், புலிகளின் மூத்த உறுப்பினர் பற்குணம், சுந்தரம், தேவன், ஜெகன், மனோமாஸ்டர், சிறிசபாரத்தினம்,அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், பத்மநாபா, சாம் தம்பிமுத்து போன்ற தலைவர்கள் கொல்லப்பட்டனர். பல்கலைக்கழக மாணவர்கள் விமலேஸ்வரன், செல்வி, சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் காயம்பட்டவர்களுக்கு உதவி செய்த ரஜனி திரணகம ( புலிகளின் முன்னாள் உறுப்பினர் நிர்மலா நித்தியானந்தனின் சகோதரி ) .......... போன்றோர் கொல்லப்பட்டனர். இது தொடர்ந்து அரசியலில் "அ" தெரிந்த அனைவரும் கொல்லப்பட்டனர். தமிழீழ மக்களே, உங்களுக்கு தெரியுமா? 1990ம் ஆண்டில் எடுத்த ஒரு புள்ளி விபரப்படி ஸ்ரீலங்கா இராணுவத்தால் கொல்லப்பட்ட இளைஞர்களை விட, எமக்குள் ஏற்பட்ட போட்டியாலும் அதிகாரவெறியாலும், தனித்தலைமை மோகத்தாலும் கொல்லப்பட்ட இளைஞர்களின் எண்ணிக்கை அதிகம் என்பது! இந்த நிலைமையில் தான் போராட ப் புறப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர்கள் விரக்தியினால் போராட்டத்தில் இருந்து ஒதுங்கி வெளிநாடுகளுக்கு ஓடினார்கள். போராடவேண்டும் என வெளிநாடுகளிலிருந்து இளைஞர்கள் படையெடுத்த நிலைமாறி விரக்தியினால் போராட்டத்தில் இருந்து ஒதுங்கி வெளிநாடு செல்லும் நிலை ஏற்பட்டது. முன்பு, போராட புலிகள் தயார், நிதி உதவி தான் தேவை என்றார்கள். இப்போது ஆயுத பலமும் நிதியும் உண்டு வெளிநாடு சென்றவர்களே ஓடிவாருங்கள்! என்று புலிகளின் தமிழேந்தி போன்றவர்கள் அழைகின்றார்கள். உலகின் 4வது பலமிக்க இராணுவத்தை அடித்து விரட்டினோம், வடதமிழீழத்தின் ஒரு அங்குலம் கூட இராணுவம் முன்னேற விடமாட்டோம் என்றார்கள். இன்று வட தமிழீழத்தையே விட்டு ஓட வேண்டிய காரணம் என்ன? சிந்தியுங்கள்! தமிழர்களே சிந்தியுங்கள்! இப்போது புரிகிறதா எமது பின்னடைவிற்கு காரணங்கள் என்ன என்பது. ஆளுமையும் உடல்வலிமையும் உள்ள இளைஞர்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தி வெளிநாடு ஓடக்காரணமாக இருந்து விட்டு அப்பாவித் தமிழ் சிறுவர்களை பலவந்தப்படுத்தி எதிரிக்கெதிராக போராடினால் நாம் வெற்றி பெற முடியுமா? இன்று ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்புப் படைகள் கோட்டையில் சிங்கக்கொடி ஏற்றும் நிலைக்கு காரணம் ஸ்ரீலங்கா இராணுவத்தின் பலமல்ல, எமக்கு நாமே குழிபறித்ததால் ஏற்பட்ட பலவீனமே என்பதை யாராவது மறுக்க முடியுமா?

உலக வரலாறு தரும் பாடம்.

அதர்மத்திற்கு எதிரான தர்மத்தின் போராட்டங்கள், அநீதிக்கெதிரான நீதியின் போராட்டங்கள் வென்றதாகத் தான் உலக வரலாறு உண்டு. தமிழீழப் போராட்டம் அநியாயத்திற்கு எதிரான போராட்டம் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் போராட்டத்தை முன்னெடுக்கும் தலைமையின் நடவடிக்கைகள் இனவெறி ஒடுக்குமுறையாளர்களின் நடவடிக்கைகளில் இருந்து வேறுபட்டு இருககின்றதா?

**1983ல் வெலிக்கடையில் சிறைப்படுகொலை நடாத்தி மனித வேள்வி நடாத்தியது ஸ்ரீலங்கா இனவாத அரசு.**

1987ல் கந்தன் கருணை தடுப்புமுகாமில் சக போராளிகளை வேட்டையாடியது புலிகள் இயக்கம்.

**1981ல் தென் கிழக்காசியாவிலேயே சிறந்த யாழ்நூலகத்தை எரித்து பண்பாட்டு படுகொலை புரிந்தது இனவெறி அரசு.**

1993ல் தேடகம் நூலகத்தை எரித்து பண்பாட்டு படுகொலை புரிந்தனர் புலிகள் இயக்கத்தினர்.

**வெலிக்கடை, பனாகொடை, பூசாமுகாம்களில், தமிழ் இளைஞர்களை வதைத்தது ஸ்ரீலங்கா இனவாத அரசு.**

துணுக்காய் சிறையில் தமிழ் இளைஞர்களை வதைத்தது இரத்தவெறி கொண்ட புலிகள்.

**தமிழர் சொத்துக்களை சூறையாடி 58லும், 77லும், 83லும், கலவரத்தை ஏற்படுத்தி தமிழர்களை அந்நிய மண்ணிலிருந்து அடித்து விரட்டியது ஸ்ரீலங்கா அரசு.**

சொந்த மண்ணிலிருந்து எதுவுமற்ற ஏதிலிகளாக முஸ்லீம் மக்களை 24மணிநேரத்திற்குள் பலவந்தமாக விரட்டியது புலிகள் இயக்கம்.

**1958ல் டயர் போட்டும் 1983ல் மோட்டார் வாகனத்தில் சென்று கொண்டிருந்த தமிழர்களை மண்ணெண்ணை ஊற்றி கொழுத்தியும் அட்டூழியங்கள் பண்ணினார்கள் சிங்கள இனவெறி காடையர்கள்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1986ல் சக தமிழ் இயக்கப்போராளிகளை உயிருடன் டயர் போட்டுக் கொழுத்தி அடாவடித்தனம் பண்ணினார்கள் அராஜகப் புலிகள்.

பொம்பர் தாக்குதல் மூலமும் வீதிகளில் எழுந்தமானமாக சுட்டும் தமிழ்மக்களை படுகொலை செய்தது ஸ்ரீலங்கா அரசு.

அநுராதபுரம், டொலர் பாம், கென்ற் பாம், கல்லறாவ, அப்பாவி சிங்கள மக்களை கண்டதுண்டமாக வெட்டிக் கொன்று குவித்தது புலிப்பயங்கரவாதம்.

பத்திரிகைச் சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம் பேச்சுச் சுதந்திரத்திற்கு தடைவிதித்தது ஸ்ரீலங்கா அரசு. ஆனால் இதுவரை தமிழீழ விடுதலைக்காக போராடிய எந்த இயக்கத்தையும் தடை செய்ததாக அறிவிக்கவில்லை.

பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்பட்டது, பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டனர், கொல்லப்பட்டனர். போராட்டத்தின் தவறுகளை விமர்சித்தவர்கள் கொல்லப்பட்டனர். புலிகளைத் தவிர வேறு இயக்கங்களோ சக்திகளோ, தனிநபர்களோ இயங்குவதற்கு தடைவிதித்தனர் ஜனநாயக விரோதப் புலிகள்.

மேலே சொன்ன ஒப்பீட்டில் இருந்து என்ன தெரிகின்றது? தமிழீழப் போராட்டம் நியாயமானது என்றாலும் ஸ்ரீலங்கா ஒடுக்குமுறையாளர்களில் இருந்து வேறுபட்டு போராடும் தலைமையின் நடவடிக்கைகள், நியாயமானதாக இருக்கவில்லை. அவ்வாறான தலைமை முன்னெடுத்துச் செல்லும் போராட்டம் வெற்றி பெறமுடியுமா?

சிந்தியுங்கள், தமிழ் மக்களே சிந்தியுங்கள்!

தமிழீழ கனவு நனவு ஆக வேண்டும் என்று உண்மையிலேயே நீங்கள் ஆசைப்பட்டால் தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த தவறான போக்குகளைத் திருத்தி இதய சுத்தியுடன் போராடுமாறு புலிகளை நிர்ப்பந்தியுங்கள். இதுவரையும் எதிரி யார், நண்பன் யார், என்பதில் தெளிவின்மையால் எமக்குள் நாமே மோதி, பிரபாகரனின் தனித்துவத்தலைமை ஆசையால் எமது போராட்டத்தை சீர்குலையச் செய்து விட்டோம். இந்திய மக்களின் நன்மதிப்பை பெற்ற நேரு குடும்பத்தின் ராஜீவ் காந்தியை கொன்றதன் மூலம் நட்பை பேணவேண்டிய இந்தியாவுடன் பகையை சம்பாதித்து இந்திய மக்களின் தார்மீக ஆதரவை இழந்து விட்டோம். விளைவு 1983ல்ஏற்பட்ட ஈழத்தமிழர்களுக்கான ஆதரவின் எழுச்சியை இப்போது காணமுடியவில்லை. எனவே பொது எதிரிக்கெதிரான நட்பு சக்திகளை அரவணைத்து போராட்டத்தை தொடர்ந்து நடத்துமாறு புலிகளை வற்புறுத்துவோம்.

இராணுவ வீர சாகசங்களால் மட்டும் தமிழீழம் மலர்ந்து விடுமா!

இதுவரை காலமும் தமிழீழ விடுதலைப் புலிகள் சாதித்த இராணுவ சாதனைகளை சமகால விடுதலை இயக்கங்கள் எதுவும் சாதிக்கவில்லை என்பது மறுக்கமுடியாத உண்மைதான், ஆனால் இந்த இராணுவவீர சாகஸங்களால் மட்டும் விடுதலை கிடைத்துவிடுமா? இந்தியப் பிரதமரை, இலங்கை ஜனாதிபதியை, அரசியல் தலைவர்களை கொன்றதால் போராட்டத்தில் முன்னேற்றம் ஏற்பட்டதா? இல்லை! உலகநாடுகளில் தனிநபர் பயங்கரவாதிகள் என்ற முத்திரை தான் குத்தப்பட்டது. தமிழீழ விடுதலையை வென்றெடுக்க தெளிவான அரசியல் கொள்கையும், இராணுவரீதியான பலமும் சர்வதேச அபிப்பிராயத்தை வென்றெடுக்கூடிய நடவடிக்கைகளும் அவசியமானது. தென்னாபிரிக்கா தலைவர் நெல்சன் மண்டேலா 27 வருடம் சிறையில் இருந்து போராடி உலக அபிப்பிராயங்களை தமக்குச் சாதகமாக மாற்றி குறைந்த உயிரிழப்புகளுடன் தனது இலட்சியத்தை அடைந்தார் என்பது எம் கண்முன் நிகழ்ந்த வரலாறு. இன்று உலகநாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளை விடுதலைப்போராளிகள் என்று கருதுகின்றார்களா? இல்லை! அரச பயங்கரவாதத்திற்கு எதிரான தனிநபர் பயங்கரவாதிகள் என்றுதான் கருதுகின்றன. உலக செய்திஸ்தாபனங்கள் ஈவிரக்கமற்ற பயங்கரவாதிகள் "RUTHLESS TERRORIST"என்றுதான் எழுதுகின்றார்கள். இதனால் தான் இன்றுள்ள நெருக்கடியான நிலையிலும் எந்த ஒரு நாடும் ஏன் என்று கேட்கவில்லை. மாறாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கெதிராக நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். கனடாவில் சுரேஸ் விவகாரம், அமெரிக்க இராஜாங்க திணைக்களம், ஐரோப்பிய பாராளுமன்றம் வெளியிட்ட புலிகளின் நடவடிக்கைகளுக்கெதிரான அறிக்கைகள் இதைத்தான் எமக்கு நிரூபிக்கின்றன. எனவே துப்பாக்கிகளுக்காக அரசியல் என்ற நிலையை மாற்றி தெளிவான அரசியல் கொள்கைக்காக ஆயுதங்கள் என்ற நிலையை ஏற்படுத்தி எமது சரியான நடைமுறைகள் மூலம் சர்வதேச அரங்கில் எமது போராட்டம் பற்றி நல்லபிப்பிராயம் ஏற்படுத்துமாறு புலிகளைக் கோருவோம்.

போராடும் இளைஞர்களுக்கு ஒருமைப்பாட்டைத் தெரிவிப்போம். அல்லலப்படும் மக்களுக்கு ஆறுதல் தெரிவிப்போம்.

உயிரைத் துச்சமாக மதித்து களத்தில் போராடும் எம் சகோதரர்களே! தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது நாம் வைக்கும் விமர்சனங்கள் உங்களுக்கு கசப்பை ஏற்படுத்தலாம். உங்கள் போர்க் குணாம்சத்தையும் விடுதலையில் உள்ள விசுவாசத்தையும் நாம் மதிக்கிறோம். தலைமையின் தவறான வழி நடத்தலினால் உங்கள் தியாகங்கள் வீணாகிப் போய்விடக்கூடாது என்பது தான் எமது அவா! நீங்கள் நினைத்தால் தமையின் தவறுகளை திருத்தி போராட்டப்பாதையில் மாறுதல்களை ஏற்படுத்தி தமிழீழ விடுதலைப்போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு இட்டுச்செல்ல முடியும். தவறான தலைமையினால் மூளைச்சலவை செய்யப்பட்டு குரூரக் கொலைகள் புரிந்த முன்னாள் புலிகள் இன்று நித்திரை கொள்ள முடியாமல் அமைதி இன்றி அலைவதாகச் சொல்கின்றார்கள்.சிலகாலம்வெளிநாடுகளில் வாழ்ந்த கிட்டு கூட வெளிநாடுகளில் நிலவும் ஜனநாயக சுதந்திரத்தை பார்த்து வியந்து தனது கடந்த காலத்தைப் பற்றி வேதனைப்பட்டார்.

உரிய விலைகொடுத்து வாங்கிய புத்தாடை அதிலும் பட்டாடை அணிந்தால் எல்லோருக்கும் மகிழ்ச்சி தான். உரிய விலையிலும் அதிகமாக கொடுத்து வாங்கிய பட்டாடை பட்டாடை அணிவதில் உள்ள மகிழ்ச்சி இயலுமான வரை அணியும்போது ஏற்படாது. தமிழீழ விடுதலைக்கும் உரியவிலை கொடுக்கப்பட வேண்டும். போராளிகளின் இழப்பையும் மக்களினது அழிவையும் குறைத்து பெறப்படும் தமிழீழத்தில் தான் எமது மக்கள் மகிழ்ச்சியாக வாழமுடியும். கண்களை விற்று சித்திரம் வாங்குவது போல் மக்கள் இல்லாத தமிழீழத்தை போராட்டப்பின்னடைவால் பிறந்த மண்ணில் இருந்து வெளியேறி மத்தளத்தின் வென்றெடுத்து என்ன பயன்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்